சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.71/2025

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் புதன்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

பெயர்	ராஜேஷ்குமார்	தொழில்	பட்டு தொழில்
தந்தை பெயர்	வெங்கடேசன்	ஜாதி	
கிராமம்		சமயம்	
தாலுக்கா	ஆரணி	வயது	43

01.04.2026 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 22.06.2022 தேதியிட்ட காசோலை எண்.008086 காசோலை **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.06.2022 தேதியிட்ட காசோலை திரும்பியதற்கான குறிப்பாணை **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.08.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு திரும்பியதற்கான அஞ்சல் உறை **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு திரும்பியதற்கான அஞ்சல் உறை **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.